பரிபாடல் பாடல் வினா

விசும்பில் ஊழி ஊழ் ஊழ் செல்லக்

கரு வளர் வானத்து இசையில் தோன்றி,

உரு அறிவாரா ஒன்றன் ஊழியும்;

உந்து வளி கிளர்ந்த ஊழி ஊழ் ஊழியும்

செந்தீச் சுடரிய ஊழியும்; பனியோடு

தண்பெயல் தலைஇய ஊழியும்: அவையிற்று

உள் முறை வெள்ளம் மூழ்கி ஆர்தருபு

மீண்டும் பீடு உயர்பு ஈண்டி  அவற்றிற்கும்

உள்ளீடு ஆகிய இருநிலத்து ஊழியும்.

வினாக்கள்

1.இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல்

2.இப்பாடலை இயற்றியவர்

3.ஊழ் ஊழ் – இலக்கணக்குறிப்பு

4.ஊழி என்பதன் பொருள்

5.வானத்து இசையில் – இசை என்பது

6.‘தண்பெயல்’ என்ற சொல்லின் பொருள்

7.செந்தீ – இலக்கணக்குறிப்பு

8.சிறப்பு என்ற பொருள் தரும் சொல்

9.இருநிலம் – இலக்கணக்குறிப்பு

10.பரிபாடலில் எழுபது பாடல்கள் இருந்ததாகக் கூறியவர்கள்

11.தற்போது பரிபாடலில் கிடைத்துள்ள பாடல்களின் எண்ணிக்கை

12.சங்க நூல்களுள் பண்ணோடு பாடப்பட்ட நூல்

13.தலைஇய என்பது

14.விசும்பில் ஊழி ஊழ் ஊழ் செல்ல என்ற பரிபாடல் அடிகள் உணர்த்தும் உண்மை

15.பாடலிலுள்ள எதுகைச் சொற்கள்

16.பரிபாடல், _____________ பரிபாடல் என்னும் புகழுடையது.

பொருள் அறிக.

17.ஊழி =

18.விசும்பு =

19.வளி =

20.ஊழ் =

21.தண்பெயல் =

22.ஆர் தருபு =

23.பீடு =

24.ஈண்டி =

இலக்கணக்குறிப்பு

25.ஊழ் ஊழ் -

26.வளர்வானம், கருவளர் –

27.செந்தீ, தண்பெயல் -

28.வாரா -

29.கிளர்ந்த -

30.தோன்றி, ஈண்டி, மூழ்கி –

31.பாடலில் உணர்த்தப்படும் கருத்து ________________

32.விசும்பு, இசை, ஊழி, முறையே

பாடலில் இச்சொற்கள் உணர்த்தும் பொருள்கள் _____________